# காப்பிக்கான ஒருங்கிணைந்த அபிவிருத்தி திட்டங்கள் (12-வது ஐந்தாண்டு திட்டம்)





காப்பி வாரியம் பெங்களூரு

# மறு நடவுக்கான மானியத்திட்டம் ( Replanting )

## திட்டத்தின் நோக்கம் :

பழைய மற்றும் உற்பத்தித் திறன் குறைந்த காப்பி தோட்டங்களில் மறுநடவு செய்தலை ஊக்குவித்து காப்பி மகசூல் மற்றும் தோட்டத்தின் உற்பத்தி திறனை மேம்படுத்துதல்.

## இத்திட்டத்தின் மூலம் பயன்பெற காப்பி விவசாயிகளுக்கான தகுதிகள் :

1. அனைத்து தரப்பட்ட காப்பி விவசாயிகள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சட்டத்தின் கீழ் இயங்கும் காப்பி தோட்டங்கள் இத்திட்டத்தின் மூலம் மானியம் பெற தகுதியானவை.

2. பழைய மற்றும் உற்பத்தித்திறன் குறைந்த 25 வருடங்களுக்கு மேல் வயது உள்ள அராபிகா காப்பி செடிகள், 40 வருடங்களுக்கு மேல் வயது உள்ள ரொபஸ்டா செடிகள் மற்றும் 15 வருடங்களுக்கு மேல் வயது உள்ள குட்டை ரக அராபிகா காப்பி செடிகளை மறுநடவு செய்வதால் இத்திட்டத்தில் மானியம் பெறலாம். மேற்கண்ட காப்பி செடிகள் முழுமையாக மறுநடவு மற்றும் பழைய காப்பி செடிகளின் இடைவெளியில் மறுநடவு செய்திருந்தாலும் மானியம் பெற இயலும். மேற்படி இத்திட்டத்தில் விதிவிலக்கு பெற சம்பந்தப்பட்ட காப்பி வாரிய விஸ்தரிப்பு பிரிவு இணை இயக்குனருக்கு தெரிவித்தால் தலைமை அலுவலக ஆலோசனைப்படி தகுந்த முடிவு செய்யப்படும்.

3. ரொபஸ்டா காப்பி தோட்டத்தின் இடைவெளியில் அராபிகா காப்பி ரகங்கள் ஊடு நடவு செய்யப்பட்டு ரொபஸ்டா ரக காப்பியை முதன்மை மற்றும் முக்கிய பயிராக பராமரித்தால் ரொபஸ்டா ரகங்களுக்கு வழங்கப்படும் மானியம் மட்டுமே பெற இயலும்.

4. பழைய காப்பித் தோட்டங்களில் இடைவெளி மறுநடவு செய்யப்பட்டு இருந்தால் வயது முதிர்ந்த மற்றும் மகசூல் குறைந்த காப்பி செடிகளை ஒரு வருட மகசூல் அறுவடை செய்த பின் அகற்ற வேண்டும். எந்த வித சூழ்நிலையிலும் அதிக பட்சமாக இரண்டு ஆண்டுகளுக்கு மட்டுமே அறுவடை செய்ய அனுமதிக்கப்படும். அதாவது இடைவெளி மறுநடவு 2014-ம் ஆண்டு ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரை செய்யப்பட்டு இருந்தால் பழைய காப்பி செடிகளில் உள்ள மகசூலை 2014-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2015-ம் அண்டு மார்ச் மாதம் வரையும் அல்லது இரண்டாம் வருட மகசூலை 2015-ம் ஆண்டு டிசம்பர் மாதம் முதல் 2016-ம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலும் அறுவடை செய்த பின் பழைய காப்பி செடிகளை முழுமையாக அகற்ற வேண்டும். இவ்வாறு செய்வதால் இடைவெளியில் புதியதாக நடப்பட்ட காப்பி செடிகளுக்கு போதுமான சூரிய வெளிச்சம் கிடைக்கப்பெற்று வேகமான வளர்ச்சி ஏற்பட வழிவகை செய்யும்.

5. கடல் மட்டத்திலிருந்து 1100 மீட்டர் உயரத்திற்கு மேவ் உள்ள பகுதிகளிவ் அராபிகா காப்பி செடிகளை அகற்றி விட்டு ரொபஸ்டா காப்பி ரகங்களை மறுநடவு செய்தால் மறுநடவு மானியம் பெற இயலாது.

6. குறு மற்றும் சிறு காப்பி தோட்டங்களில் 3 அல்லது 4க்கு மேற்பட்ட மலைப் பயிர்கள் பயிரப்பட்டு இருந்தால் மேற்படி மறுநடவு மானியம் ஒரு காப்பி செடிக்கு இவ்வளவு மானியம் அடிப்படையில் என்ற அளவில் செடிகளின் மொத்த எண்ண்ணிக்கை அடிப்படையில் கணக்கிடப்படும். உதாரணமாக அராபிகா ரக காப்பி 6×6 என்ற இடைவெளியில் நடவு செய்யப்பட்டு குறைந்த பட்சம் 3000 செடிகள் இருந்தால் மேற்படி மறுநடவு செய்யப்பட்ட பரப்பளவு ஒரு ஹெக்டேருக்கு உள்ள மானியமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

7. முடிந்த வரையில் தோட்டப்பணிகளை எந்திர மயமாக்கல் முறைக்கு ஏற்ப வரையறுக்கப்பட்ட நடவு முறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். மேற்படி பின்பற்றப்பட்ட தோட்டங்களுக்கு மறுநடவு மானியமானது செடிகளின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்காமல் மொத்த மறு நடவு செய்யப்பட்ட பரப்பளவுக்கு வழங்கப்படும்.

8. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சட்டத்தின் கீழ் இயங்கும் தோட்டங்கள் மேற்படி மானியம் பெற தங்களுடைய முழுமையான திட்ட வரைவு அறிக்கையை சமர்பிக்க வேண்டும். அந்த அறிக்கையில் தோட்டத்தை நவீன மயமாக்கலின் நோக்கம் மற்றும் குறிப்பிட்ட கால அவகாசத்தில் ஒவ்வொரு வருடமும் செய்யப்பட வேண்டிய பணி இலக்கினை வரிசைப் படுத்த வேண்டும்.

## மறு நடவுக்கான மொத்த செலவு மதிப்பீடு

1. அராபிகா
ரூ. 1,75,000/- ஒரு ஹெக்டேருக்கு

2. ரொபஸ்டா
ரூ, 1,25,000/- ஒரு ஹெக்டேருக்கு

## மறு நடவு மானியத்தின் அளவு மற்றும் உச்ச வரம்பு விகிதம்.

1. 2 ஹெக்டேர் வரை உள்ள குறுகாப்பி விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் 40 சதவிகீதம் மானியம் பெறலாம்.

2. 2 முதல் 10 ஹெக்டேர் வரை உள்ள சிறு விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் 30 சதவிகிதம் மானியம் பெறலாம்.

3. 10 ஹெக்டருக்கு மேல் உள்ள விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம் மானியம் பெறலாம். (இதில் பதிவு செய்யப்பட்ட மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் அடங்கும்)

மேற்படி மானியம் ஆனது மொத்த காப்பி பரப்பளவு மற்றும் சமர்ப்பிக்கப்படும் தோட்டத்தின் ஆவணங்கள் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

## மறுநடவு மானியம் வழங்கப்படும் தவணை உச்ச வரம்பு விகிதம்.

1. முழுமையான மறுநடவு முறை :
முதல் தவணை
- திட்ட செலவு மதிப்பீட்டில் 60 %
இரண்டாம் தவணை
- திட்ட செலவு மதிப்பீட்டில் 40 %

2. இடைவெளி மறுநடவு முறை :
முதல் தவணை
- திட்ட செலவு மதிப்பீட்டில் 30 %
இரண்டாம் தவணை
- திட்ட செலவு மதிப்பீட்டில் 70 %

## மானியம் கோருவதற்கான நடைமுறைகள் :

## தொழில் நுட்ப சாத்தியக் கூறு அறிக்கை பெறுதல்

சமர்ப்பிக்கபட வேண்டிய ஆவணங்கள் :

அ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் (2 பிரதிகள்)

ஆ) புகைப்படத்துடன் கூடிய அடையாள சான்று – ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை, பாஸ்போர்ட், பான்கார்டு, ஓட்டுனர் உரிமம் மற்றும் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (இவற்றில் ஏதாவது ஒன்று)

இ) நில உடைமை சான்றுகள்.
1. பட்டா நகல்,

2. சிட்டா மற்றும் அடங்கல் (நில கைவச சான்று – நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்)

3. நில கைவச சான்று (கேரளா மாநிலத்திற்கு மட்டும்)

4. பொது அதிகாரம் பெற்றவராயின் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் நகல் (நோட்டரி வழக்கறிஞரால் கையொப்பம் இடப்பட்டது) மறு நடவு மானியம் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் அந்தப் பகுதிகளில் செயல்படும் காப்பி வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும். அவை சரிபார்க்கப்பட்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு மறுநடவு செய்வதற்கான தொழில்நுட்ப சாத்தியகூறு அறிக்கை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## முதல் தவணை மறுநடவு மானியம் கோருதல் :

விண்ணப்பதாரர் வரையறுக்கப்பட்ட மானியம் கோரும் படிவத்துடன் ( 2 பிரதிகள் ) சம்பந்தப்பட்ட ஆவணங்களை மறு நடவு செய்யப்பட்ட நிதி ஆண்டிலேயே முடிந்த வரையில் சமர்பிக்க வேண்டும்.

முதல் தவணை கோருதற்கு சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

1. கோருதல் மனு (வரையறுக்கப்பட்ட படிவத்தின் 2 பிரதிகள்)

2. தோட்டத்தின் மாதிரி வரைபடம் – இதில் மறுநடவு செய்யப்பட்ட பரப்பளவு தெளிவாக குறிப்பிடப் படுவதோடு அதன் எல்லைகள் தெளிவாக குறிப்பிடப் படவேண்டும். ( விண்ணப்பதாரர் கையொப்பத்துடன்)

3. விண்ணப்பதாரர் கையொப்பம் இடப்பட்ட செலவு கணக்கு பட்டியல்.

4. வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க பிரதி கணக்கு எண். வங்கியின் பெயர், கிளை மற்றும் பதிவு எண் விவரங்களுடன். தங்கள் பகுதி காப்பி வாரிய அலுவலங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

## இரண்டாவது தவணை மானியம் கோருதல் :

1. முழுமையான மறுநடவு முறை :

மறுநடவு செய்யப்பட்ட இரண்டாம் நிதி அண்டில் தோட்டத்தில் இடைவெளிகள் நிரப்பபட்டு அவசியமான பராமரிப்பு பணிகளை செய்த பின்பு கோருதல் படிவம் 2 பிரதிகளுடன் தேவையான ஆவணங்களுடன் இளநிலை / முதுநிலை தொடர்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

2. இடைவெளி மறுநடவு முறை :

மறுநடவு செய்யப்பட்ட பகுதியில் அதிக பட்சமாக 2 ஆண்டுகள் மகசூல் அறுவடை செய்த பின்பு அனைத்து பழைய காப்பி செடிகளையும் அகற்றி எடுத்த நிலையில் வரையறுக்கபட்ட கோருதல் படிவத்தின் 2 பிரதிகளையும் பூர்த்தி செய்து அத்துடன் தேவையான ஆவணங்களை இணைத்து இளநிலை / முதுநிலை தொடர்பு அலுவலர் அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

## 2 வது தவணை மானியம் பெற கீழ்கண்ட ஆவணங்கள் சமர்பிக்கப்பட வேண்டும் :

1. கோருதல் படிவம் (2 பிரதிகள்)
2. விண்ணப்பதாரர் கையொப்பத்துடன் கூடிய செலவுக் கணக்கு பட்டியல்

மானிய விண்ணப்பங்களை, தங்கள் பகுதி முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலர்கள் பரிசீலித்து, கள ஆய்வு செய்த பின்னர், தகுதியின் அடிப்படையில் மானியம் வழங்க ஏற்பாடு செய்வார்கள்.

---

# புதிய நடவுக்கான மானியத்திட்டம் ( Expansion )

## திட்டத்தின் நோக்கம் :

காப்பி நடவிற்கு உகந்த இடங்களில் புதிய காப்பி நடவு மற்றும் விரிவாக்கம் செய்தலை ஊக்குவித்து காப்பி உற்பத்தியை பெருக்குதல்.

## இத்திட்டத்தின் மூலம் பயன்பெற காப்பி விவசாயிகளுக்கான தகுதிகள் :

1. அனைத்து தரப்பட்ட காப்பி விவசாயிகள், பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கூட்டுறவு சட்டத்தின் கீழ் இயங்கும் காப்பி தோட்டங்கள் இத்திட்டத்தின் மூலம் மானியம் பெற தகுதியானவை.

2. புதியதாக நடவு செய்யப்படும் அராபிகா மற்றும் ரொபஸ்டா தோட்டத்திற்கு மானியம் பெறலாம்.

3. ரொபஸ்டா காப்பி செடிகளின் இடைவெளியில் அராபிகா காப்பி ரகங்கள் நடவு செய்யப்பட்டு ரொபஸ்டா ரக காப்பியை முதன்மை மற்றும் முக்கிய பயிராக பராமரித்தால் ரொபஸ்டா ரகங்களுக்கு வழங்கப்படும் மானியம் மட்டுமே பெற இயலும்.

4. கடல் மட்டத்திலிருந்து 1100 மீட்டர் உயரத்திற்கு மேல் உள்ள பகுதிகளில் ரொபஸ்டா காப்பி ரகங்களை நடவு செய்தால் புதுநடவு மானியம் பெற இயலாது.

5. குறு மற்றும் சிறு காப்பி தோட்டங்களில் 3 அல்லது 4க்கு மேற்பட்ட மலைப்பயிர்கள் பயிரப்படப்பட்டு இருந்தால் மேற்படி நடவு மானியம் ஒரு காப்பி செடிக்கு என்ற அளவில் செடிகளின் மொத்த எண்ணிக்கை அடிப்படையில் கணக்கிடப்படும். உதாரணமாக அராபிகா ரக காப்பி 6×6 என்ற இடைவெளியில் நடவு செய்யப்பட்டு குறைந்த பட்சம் 3000 செடிகள் இருந்தால் மேற்படி நடவு செய்யப்பட பரப்பளவு ஒரு ஹெக்டேருக்கு உள்ள மானியமாக கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

7. பாரம்பரியமற்ற காப்பி சாகுபடி பகுதிகளில் உள்ள பழங்குடி அல்லாதவர்களும் பயன் பெறலாம்.

8. முடிந்த வரையில் தோட்டப் பணிகளை இயந்திர மயமாக்கல் முறைக்கு ஏற்ப வரையறுக்கப்ட்ட நடவு முறைகளை விவாசயிகள் பின்பற்ற வேண்டும். மேற்படி பின்பற்றப்பட்ட தோட்டங்களுக்கு நடவு மானியமானது செடிகளின் எண்ணிக்கையை கணக்கில் எடுக்கமால் மொத்த நடவு செய்யப்பட பரப்பளவுக்கு வழங்கப்படும்.

புதிய நடவு செய்ய திட்டமிடுவோர் தகுதியான ரகங்கள் மற்றும் நடவு முறைகளை காப்பி வாரிய விரிவாக்க அலுவலர்களை கலந்தாலோசித்து பயன் பெறவும்.

## புதிய நடவுக்கான மொத்த செலவு மதிப்பீடு :

1. அராபிகா

ரூ. 1,75,000/- ஒரு ஹெக்டேருக்கு

2. ரொபஸ்டா

ரூ. 1,25,000/- ஒரு ஹெக்டேருக்கு

## புதிய நடவு மானியத்தின் அளவு மற்றும் உச்ச வரம்பு விகிதம்

1.2 ஹெக்டேர் வரை உள்ள குறுகாப்பி விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் 40 சதவிகீதம் மானியம் பெறலாம்.

2.2 முதல் 10 ஹெக்டேர் வரை உள்ள சிறு விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் 30 சதவிகிதம் மானியம் பெறலாம்.

3. 10 ஹெக்டருக்கு மேல் உள்ள விவசாயிகள் திட்ட மதிப்பீட்டில் 25 சதவிகிதம் மானியம் பெறலாம். (இதில் பதிவு செய்யப்பட்ட மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் அடங்கும்)

மேற்படி மானியம் ஆனது மொத்த காப்பி பரப்பளவு அடிப்படையில் புது நடவு செய்யப்பட்ட பரப்பளவும் சேர்த்து மற்றும் சமர்பிக்கப்படும் தோட்டத்தின் ஆவணங்கள் அடிப்படையில் நிர்ணயம் செய்யப்படும்.

## புதுநடவு மானியம் வழங்கப்படும் தவணை உச்ச வரம்பு விகிதம்.

முதல் தவணை

- திட்ட செலவு மதிப்பீட்டில் 60 %

இரண்டாம் தவணை

- திட்ட செலவு மதிப்பீட்டில் 40 %

## மானியம் கோருவதற்கான நடைமுறைகள் :

தொழில் நுட்ப சாத்தியக் கூறு அறிக்கை பெற சமர்ப்பிக்கபட வேண்டிய ஆவணங்கள்

அ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் (2 பிரதிகள்)

ஆ) புகைப்படத்துடன் கூடிய அடையாள சான்று - ஆதார் அடையாள அட்டை, குடும்ப அட்டை, பாஸ்போர்ட், பான்கார்டு, ஓட்டுனர் உரிமம் மற்றும் தேர்தல் ஆணையத்தால் வழங்கப்பட்ட வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை (இவற்றில் ஏதாவது ஒன்று)

இ நில உடைமை சான்றுகள்.

1. பட்டா நகல்,

2. சிட்டா மற்றும் அடங்கல் (நில கைவச சான்று - நீலகிரி மாவட்டத்திற்கு மட்டும்)

3. நில கைவச சான்று (கேரளா மாநிலத்திற்கு மட்டும்)

4. பொது அதிகாரம் பெற்றவராயின் பதிவு செய்யப்பட்ட பொது அதிகார பத்திரத்தின் நகல் (நோட்டரி வழக்கறிஞரால் கையொப்பம் இடப்பட்டது) புது நடவு மானியம் சம்பந்தப்பட்ட விண்ணப்பம் மற்றும் ஆவணங்கள் அந்தப் பகுதிகளில் செயல்படும் காப்பி வாரிய அலுவலகத்தில் சரிபார்க்கப்பட்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு புது நடவு செய்வதற்கான தொழில்நுட்ப சாத்தியகூறு அறிக்கை விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

## முதல் தவணை புதுநடவு மானியம் கோருதல்

விண்ணப்பதாரர் வரையறுக்கப்பட்ட மானியம் கோரும் படிவத்துடன் ( 2 பிரதிகள் ) சம்பந்தப்பட்ட ஆவணங்களை நடவு செய்யப்பட்ட நிதி ஆண்டிலேயே முடிந்த வரையில் சமர்பிக்க வேண்டும்.

## முதல் தவணை கோருதற்கு சமர்பிக்கப்பட வேண்டிய ஆவணங்கள் :

1. கோருதல் மனு (வரையறுக்கப்பட்ட படிவத்தின் 2 பிரதிகள்)

2. தோட்டத்தின் மாதிரி வரைபடம் – இதில் நடவு செய்யப்பட்ட பரப்பளவு தெளிவாக குறிப்பிடப் படுவதோடு அதன் எல்லைகள் தெளிவாக குறிப்பிடப் படவேண்டும். ( விண்ணப்பதாரர் கையொப்பத்துடன்)

3. புதிதாக காப்பி நடவு செய்யப்பட்ட பகுதியை தோட்டத்தின் அடங்கலில் காண்பிக்க வேண்டி வருவாய் அலுவலரிடம் விவசாயி அளித்த கடிதத்தையும் அலுவலர் ஒப்புதலையும் இணைக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர் கையொப்பம் இடப்பட்ட செலவு கணக்கு பட்டியல்.

4. வங்கிக் கணக்கு புத்தகத்தின் முதல் பக்க பிரதி கணக்கு எண். வங்கியின் பெயர், கிளை மற்றும் விவரங்களுடன். தங்கள் பகுதி காப்பி வாரிய அலுவலங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

## இரண்டாவது தவணை மானியம் கோருதல் :

புதுநடவு செய்யப்பட்ட இரண்டாம் நிதி அண்டில் தோட்டத்தில் இடைவெளிகள் நிரப்பபட்டு அவசியமான பராமரிப்பு பணிகளை செய்த பின்பு கோருதல் படிவம் 2 பிரதிகளுடன் தேவையான ஆவணங்களுடன் இளநிலை / முதுநிலை தொடர்பு அலுவலகத்தில் சமர்ப்பிக்கப் பட வேண்டும்.

## 2 வது தவணை மானியம் பெற கீழ்கண்ட ஆவணங்கள் சமர்பிக்கப்பட வேண்டும்

1. கோருதல் படிவம் (2 பிரதிகள்)

2. விண்ணப்பதாரர் கையொப்பத்துடன் கூடிய செலவுக் கணக்கு பட்டியல்

3. புதியதாக காப்பியின் பரப்பைக் காண்பிக்கும் அடங்கல்.

மானிய விண்ணப்பங்களை, தங்கள் பகுதி முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலர்கள் பரிசீலித்து, கள ஆய்வு செய்த பின்னர், தகுதியின் அடிப்படையில் மானியம் வழங்க ஏற்பாடு செய்வார்கள்.

# நீர் நிலை / நீர் பாசன மேம்பாட்டு திட்டங்கள் ( Water Augmentation )

## நோக்கம் :

நீர்ப் பாசன கட்டமைப்புகள் உருவாக்குதன் மூலம் காப்பித் தோட்டத்தின் உற்பத்தித் திறனை உயர்த்துவது.

## மானியம் பெறுவதற்கான தகுதிகள் :

1. அனைத்து தனிநபர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ( தந்தை, தாய், கணவன், மனைவி மற்றும் சார்ந்துள்ள குழந்தைகள் ) பெயர்களில் கூட்டாக உள்ள காப்பி தோட்டங்கள் மற்றும் 20 ஹெக்டேர் வரை உள்ள பங்குதாரர் ( **Partnership** ) நிறுவனங்கள்.

2. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் ( **Corporates** ) மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் இந்த திட்டத்தின் மூலம் மானியம் பெற இயலாது.

## மானியம் பெறக்கூடிய திட்டங்கள்

அ. நீர் சேமிப்பு தொட்டிகள், நீர் இறைக்கும் இயந்திரங்கள் பொறுத்தப்பட்ட கிணறுகள் உறைகிணறுகள் மற்றும் ஆழ்துளை கிணறுகள் போன்ற நீர்சேகரிப்பு கட்டமைப்புகள்.

ஆ. நீர்பாசன உபகரணங்கள் நிறுவுதல் (நீர் தெளிப்பான் அல்லது சொட்டு நீர் அமைப்புகள்)

1. நீர் சேகரிப்பு கட்டமைப்புகளில் ஏதாவது ஒன்று மற்றும் நீர்பாசன உபகரணங்களில் ஏதாவது ஒன்றுக்கான மானியத்தை தனியாகவோ அல்லது இரண்டையும் சேர்த்தோ ஒரே காலத்திலோ அல்லது மாறுபட்ட காலத்திலோ இந்த பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்திற்குள் பெறலாம்.

2. உறுதியான நீர்சேகரிப்பு தொட்டியை தரைமட்டத்திற்கு மேலாகவோ அல்லது தரைமட்டத்திற்கு கீழாகவோ அமைக்கலாம். எனினும் உரியமானியம் கட்டமைப்புகளின் அளவுகளை பொறுத்தும் மற்றும் காப்பித் தோட்டத்தின் பரப்பளவை கணக்கில்கொண்டே வழங்கப்படும்.

3. கடந்த 10 ஆண்டுகளில் ஒரு காப்பி விவசாயி மேற்கண்ட மானியங்களில் ஏதாவது ஒன்றை பெற்றிருந்தால் மீண்டும் அதே திட்டத்திற்கான மானியம் பெற இயலாது. உதாரணமாக ஒரு காப்பி விவசாயி கடந்த 10 ஆண்டுகளில் நீர்சேகரிப்பு தொட்டிக்கான மானியம் பெற்றிருந்தால் அவர் இந்த பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் நீர்சேரிப்பு தொட்டி / கிணறுகள் / ஆழ்துளை கிணறுக்கான மானியம் பெற இயலாது இருந்தபோதிலும் அதே நபர் நீர்பாசன உபகரணங்கள் நீர் தெளிப்பான் அல்லது சொட்டு நீர் அமைப்புகள் நிறுவமட்டும் மானியம் பெறலாம்.

4. நீர்சேகரிப்பு கட்டமைப்புகள் விண்ணப்பதாரரின் காப்பித்தோட்டத்திலோ அல்லது அருகில் உள்ள அவருக்கு சொந்தமான இடத்திலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான (தந்தை, தாய், கணவன், மனைவி மற்றும குழந்தைகள்) இடத்திலோ அமைத்துக் கொள்ளலாம் அவ்வாறு மற்ற குடும்ப உறுப்பினர்களின் இடத்தில் நீர்சேரிப்பு கட்டமைப்புகள் அமைத்தால் அந்த இடத்தின் உரிமையாளரிடமிருந்து பெற்ற ஒப்புதல் கடிதத்தை விண்ணப்பத்துடன் சமர்பிக்க வேண்டும்.

## திட்ட மதிப்பீடு மற்றும் மானியத்தின் அளவு

தோட்டத்தின் பரப்பளவைப் பொறுத்து திட்டச் செலவுமதிப்பீடு வேறுபடும்.

நீர் நிலை மேம்பாடு மற்றும் நீர்பாசன திட்டங்களுக்கு திட்டச் செலவு தொகையில் 25 சதவிகிதம் மானியம் வழங்கப்படும் அனைத்து நீர் நிலை மேம்பாட்டு திட்ட அங்கங்களையும் சேர்த்து ஒரு நபருக்கு அதிகபட்சமான 2.50 லட்சம் மட்டுமே மானியமாக வழங்கப்படும்.

## மானியம் பெறுவதற்கான வழிமுறைகள்

தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கை பெறுதல்

1. விண்ணப்பதாரர் உரிய படிவத்தை (இரண்டு பிரதிகள்) தேவையான ஆவணங்களுடன் அந்தந்த காப்பி வாரிய முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலரிடம் திட்ட வேலைகளை துவங்குவதற்கு முன் சமர்ப்பிக்கவேண்டும்.

சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்.

1. முறைப்படி பூர்த்திசெய்யப்பட்ட விண்ணப்பம் (இரண்டு பிரதிகள்)

2. விண்ணப்பதாரரின் புகைப்பட அடையாள அட்டைகளான ஆதார் அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வருமானவரி அட்டை ( **PAN CARD** ) அல்லது பாஸ்போர்ட் அல்லது வாக்காளர் அட்டை ( **EPIC** ) அல்லது ஓட்டுனர் உரிமம் ( **DRIVING LICENSE** ) இவைகளில் ஏதாவது ஒன்றின் தகவல்களை விண்ணபத்துடன் இணைக்க வேண்டும்.

தோட்ட உரிமைக்கான அத்தாட்சிகளில் கீழ்கண்ட ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்கவும்.

1. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சிட்டா மற்றும் அடங்கல்

2.நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை வருவாய்த் துறையினரால் வழங்கப்படும் நில உடைமை சான்றிதழ்

3. விண்ணப்பதாரர் பொது அதிகாரப் பிரதிநிதியாக இருந்தால் தோட்டரியால் **(NOTARY)** சான்றளிக்கப்பட்ட அதிகார பத்திர நகலை சமர்பிக்க வேண்டும்.

4. விண்ணப்பதாரர் கட்டமைப்பை குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான இடத்தில் அமைத்தால் அந்த குடும்ப உறுப்பினர்களில் சம்மதக் கடிதத்தை இணைக்க வேண்டும்.

1. ஆழ்துளை கிணறாக இருந்தால் தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கைக்கான விண்ணப்பத்துடன் மானிய கோரிக்கையையும் கட்டமைப்பு முடிந்தவுடன் ஒன்றாக சமர்ப்பிக்கலாம்.

2. உத்தேசமான நில வரைபடத்தில் செயல்படுத்தப்பட உள்ள இடத்திற்கான நான்குமால்களை தெளிவாக அடையாளம் குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் கையொப்பத்துடன் சமர்பிக்க வேண்டும்.

3. நீர் சேமிப்பு தொட்டி கிணறு ஆகியவற்றிற்கு தகுதியுள்ள பொறியாளர் வழங்கிய திட்ட வரைபடம். வரையறைகள் மற்றும் திட்ட செலவு அளிக்க வேண்டும்.

4. ஆழ்துளை கிணறு அமைக்க அதற்குறிய விலைமேற்கோள் **(Quotation)** மற்றும் மோட்டார் சாதனங்களுக்கான விலைமேற்கோள் ( **Quotation** ) சமர்ப்பிக்க வேண்டும்.

## 1. மானியம் கோருதல்

கீழ்கண்ட ஆவணங்கள் தேவை

விண்ணப்பதாரர் முடிந்தவரை விண்ணப்பித்த நிதி ஆண்டிலேயே அந்தந்த திட்ட பணியை நிறைவு செய்துவிட்டு கீழ்கண்ட ஆவணங்களுடன் மானியம் கோர வேண்டும்.

1) முறையாக பூர்த்தி செய்த கோரிக்கை மனு (இரண்டு பிரதிகள்)

2) தொழில்நுட்ப சாத்திய கூறு அறிக்கையின் நகல்

3) மோட்டர், நீர் தொளிப்பான் சாதனம் மற்றும் சொட்டு நீர் பாசன சாதனம் ஆகியவைகளுக்கு **( Cash Bill )** அசல் கணக்கு விலைப்பட்டியல் ( TIN No. ) பதிவு எண் உடன் வேண்டும்.

4) கட்டுமான வேலைகளுக்கு தகுதியான பொறியாளரிடமிருந்து வேலை முடித்ததற்கான அறிக்கையில் அளவீடுகள் மற்றும் செலவு செய்த விவரத்தை அளிக்க வேண்டும்.

5) திறந்த கிணறு, நீர் சேமிப்பு தொட்டி, ஆழ்துளை கிணறு ஆகியவைகளுக்கான செலவு கணக்கு, விண்ணப்பதாரரின் வங்கி கணக்கு எண் வங்கியின் பெயர் மற்றும் கிளை **IFSC Code** ஆகியன உள்ளடக்கிய வங்கி கணக்கு புத்தகத்தின் நகல் ஆகியவற்றை தங்கள் பகுதி காப்பி வாரிய அலுவலங்களில் சமர்ப்பிக்க வேண்டும்.

மானிய விண்ணப்பங்களை, தங்கள் பகுதி முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலர்கள் பரிசீலித்து, கள ஆய்வு செய்த பின்னர், தகுதியின் அடிப்படையில் மானியம் வழங்க ஏற்பாடு செய்வார்கள்.

# தர மேம்பாட்டு திட்டம் ( Quality Upgradation )

## நோக்கம் :

தரமான காப்பி தயாரிக்க தேவைபடும் கட்டமைப்புகளை உருவாக்க காப்பி விவசாயிகளுக்கு உதவித்தொகை வழங்குதல்.

## மானியம் பெறுவதற்கான தகுதிகள் :

1. அனைத்து தனிநபர் மற்றும் குடும்ப உறுப்பினர்களின் ( தந்தை, தாய், கணவன், மனைவி மற்றும் சார்ந்துள்ள குழந்தைகள் ) பெயர்களில் கூட்டாக உள்ள காப்பி தோட்டங்கள் மற்றும் 20ஹெக்டேர் வரை உள்ள பங்குதாரர் (**Partnership** ) நிறுவனங்கள்.

2. பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் **( Corporate )** மற்றும் கூட்டுறவு நிறுவனங்கள் இந்த திட்டத்தின் மூலம் மானியம் பெற இயலாது.

3. காப்பி தர மேம்பாடு கட்டமைப்புகளான பழம் அரைக்கும் இயந்திரம், சேமிப்பு கிடங்கு, இயந்திர உலர்த்தி அல்லது உலர்களம் ஆகியவற்றிற்கான மானியம் பெறலாம்.

4. காப்பி பழம் அரைக்கும் இயந்திர அமைப்பானது பழம் அரைக்கும் இயந்திரம், கழுவும் இயந்திரம், மோட்டார் உபகரணங்கள், பழம் சேகரிக்கும் தொட்டி, மிதவை தொட்டி, நொதிக்கும் தொட்டி மற்றும் பழம் அரைக்கும் கூடம் ஆகியவற்றை கொண்டதாகும்.

5. மாசு கட்டுப்பாடு திட்டத்தின் கீழ் வரும் சுற்றுப்புறச்சூழலுக்கு உகந்த காப்பி அரைக்கும் இயந்திரம் வாங்கி அதற்கு மானியம் பெறுபவர் மற்ற தர மேம்பாட்டு திட்ட மானியங்கள் பெற இயலாது.

6. இயந்திர உலர்த்தியானது உலர்களம் மற்றும் மின் மோட்டார் அல்லது டீசல் இயந்திரத்தை கொண்டதாகும்

7. பன்னிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் மானியத்தை மேலே குறிப்பிட்டுள்ள வேலைகளுக்கு ஒரே காலத்திலோ அல்லது மாறுபட்ட காலத்திலோ பெறலாம்.

8. கடந்த 10 ஆண்டுகளில் ஒரு காப்பி விவசாயி மேற்கண்ட மானியங்களில் ஏதாவது ஒன்றை பெற்றிருந்தால் மீண்டும் அதே திட்டத்திற்கான மானியம் பெற இயலாது. உதாரணமாக ஒரு காப்பி விவசாயி கடந்த 10 ஆண்டுகளில் உலர்களத்திற்கான மானியம் பெற்றிருந்தால் அவர் இந்த பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் உலர்களம் அல்லது இயந்திர உலர்களத்திற்கான மானியம் பெற இயலாது. இருந்தபோதிலும் அதே நபர் மற்ற தர மேம்பாடு கட்டமைப்புகளான அரைக்கும் இயந்திரம் சேமிப்பு கிடங்கு ஆகியவற்றிற்கான மானியம் மட்டுமே பெறலாம்.

9. தர மேம்பாடு கட்டமைப்புகள் விண்ணபப்தாரரின் காப்பித்தோட்டத்திலோ அல்லது அருகில் உள்ள அவருக்கு சொந்தமான இடத்திலோ அல்லது அவரது குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான ( தந்தை, தாய், கணவன், மனைவி மற்றும் குழந்தைகள் ) இடத்திலோ அமைத்துக்கொள்ளலாம் அவ்வாறு மற்ற குடும்ப உறுப்பினர்களின் இடத்தில் தரமேம்பாடு கட்டமைப்புகள் அமைத்தால் அந்த இடத்தின் உரிமையாளரிடமிருந்து பெற்ற ஒப்புதல் கடிதத்தை விண்ணபப்த்துடன் சமர்பிக்க வேண்டும்.

10. பாரம்பரியமற்ற காப்பி சாகுபடி பகுதிகளில் உள்ள பழங்குடி அல்லாதவர்களும் பயன் பெறலாம்.

## மானியத்தின் அளவு :

தர மேம்பாட்டு திட்டச் செலவு தொகையில் 20 சதவிகிதம் மானியம் வழங்கப்படும் ஒரு நபருக்கு அனைத்து தர மேம்பாட்டு திட்ட அங்கங்களையும் சேர்த்து அதிகபட்சமாக 2.50 லட்சம் மட்டுமே மானியமாக வழங்கப்படும்.

## தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்க பெறுதல்

1. விண்ணப்பதாரர் உரிய படிவத்தை (இரண்டு பிரதிகள்) தேவையான ஆவணங்களுடன் அந்தந்த காப்பி வாரிய முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலரிடம் திட்ட வேலைகளை துவங்குவதற்கு முன் சமர்ப்பிக்கவேண்டும்.

சமர்ப்பிக்கவேண்டிய ஆவணங்கள்.

1. முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம் (இரண்டு பிரதிகள்)

2. விண்ணப்பதாரரின் புகைப்பட அடையாள அட்டைகளான ஆதார் அட்டை அல்லது குடும்ப அட்டை அல்லது வருமானவரி அட்டை ( PAN CARD ) அல்லது பாஸ்போர்ட் அல்லது வாக்காளர் அட்டை ( EPIC) அல்லது ஓட்டுனர் உரிமம் இவைகளில் ஏதாவது ஒன்றின் தகவல்களை விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.

1. தோட்ட உரிமைக்கான அத்தாட்சிகளில் கீழ்கண்ட ஏதாவது ஒன்றை சமர்ப்பிக்கவும்.

1. தமிழ் நாட்டைப் பொறுத்தவரை சிட்டா மற்றும் அடங்கல்

நீலகிரி மாவட்டத்தைப் பொறுத்தவரை வருவாய்த் துறையினரால் வழங்கப்படும் நில உடைமை சான்றிதழ்

2. விண்ணப்பதாரர் பொது அதிகாரப் பிரதிநிதியாக இருந்தால் நோட்டரியால் ( NOTARY ) சான்றளிக்கப்பட்ட அதிகார பத்திர நகலை சமர்பிக்க வேண்டும்.

3. விண்ணப்பதாரர் கட்டமைப்பை குடும்ப உறுப்பினர்களுக்கு சொந்தமான இடத்தில் அமைத்தால் அந்த குடும்ப உறுப்பினர்களில் சம்மதக் கடிதத்தை இணைக்க வேண்டும்.

4. உத்தேசமான நில வரைபடத்தில் செயல்படுத்தப்பட உள்ள இடத்திற்கான நான்குமால்களை தெளிவாக அடையாளம் குறிப்பிட்டு விண்ணப்பதாரரின் கையொப்பத்துடன் சமர்பிக்க வேண்டும்.

5. பழ அரவை கூடாரம். சேமிப்பு கிடங்கு உலர் கூடாரம் மற்றும் உலர்களம் ஆகியவற்றிற்கு தகுதியுள்ள பொறியாளர் வழங்கிய திட்ட வரைபடம் வரையறைகள் மற்றும் திட்டசெலவு ஆகியவை அளிக்கப்பட வேண்டும்.

6. பழம் அரைப்பான் மற்றும் மின் உலர்த்தி போன்ற சாதனங்களுக்கான அசல் விலை மேற்கோள் சமர்பிக்கவேண்டும்

7. அப்பகுதி தொடர்பு அலுவலர் ஆவணங்களை பரிசீலத்து கள ஆய்வு மேற்கொண்ட பின்னர் தர மேம்பாடு பணிக்குறிய தொழில்நுட்ப சாத்தியக்கூறு அறிக்கையை அளிப்பார்.

## 11. மானியம் கோருதல்.

கீழ்கண்ட ஆவணங்கள் தேவை

விண்ணப்பதாரர் முடிந்தவரை விண்ணப்பித்த நிதி ஆண்டிலேயே அந்தந்த திட்ட பணியை நிறைவு செய்துவிட்டு கீழ்கண்ட ஆவணங்களுடன் மானியம் கோர வேண்டும்.

1) முறையாக பூர்த்தி செய்த கோரிக்கை மனு (இரண்டு பிரதிகள்)

2) தொழில்நுட்ப சாத்திய கூறு அறிக்கையின் நகல்

3) அரைப்பான் மற்றும் மின் உலர்த்தி ஆகியவைகளுக்கு ( **Cash Bill** ) அசல் கணக்கு விலைப்பட்டியல் **TIN No.** உடன் வேண்டும்.

4) பணிக்கான செலவு கணக்கை விண்ணப்பதாரர் கையொப்பமிட்டு சமர்பிக்க வேண்டும்.

5) கட்டுமான வேலைகளுக்கு தகுதியான பொறியாளரிடமிருந்து வேலை முடித்ததற்கான அறிக்கையில் அளவீடுகள் மற்றும் செலவு செய்த விவரத்தை அளிக்க வேண்டும்.

6) விண்ணப்பதாரரின் வங்கி கணக்கு எண், வங்கியின் பெயர் மற்றும் கிளை **IFSC Code** ஆகியன உள்ளடக்கிய வங்கி கணக்கு புத்தகத்தின் நகலுடன் அந்த பகுதியிலுள்ள காப்பி வாரிய அலுவலகத்தில் சமர்ப்பிக்க வேண்டும்.

மானிய விண்ணப்பங்களை, தங்கள் பகுதி முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலர்கள் பரிசீலித்து, கள ஆய்வு செய்த பின்னர், தகுதியின் அடிப்படையில் மானியம் வழங்க ஏற்பாடு செய்வார்கள்.

# மாசுக்களை தணித்தல் ( Pollution Abatement )

காப்பி தோட்டங்களில் காப்பி பதப்படுத்தும் போது ஏற்படும் மாசுக்களை தவிர்க்க இயற்கை சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பான்கள் அல்லது மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நெறிமுறைகளின் கீழ் அமைக்கப்படும் மாசுவை தணிக்கும் முறைகளுக்கு காப்பி வாரியத்தின் மூலம் மானியம் வழங்கல்.

மாசுக்களை தணிக்க வழங்கப்படும் மானிய உதவிகள் இரண்டு பிரிவுகளாகும். அதாவது இயற்கை சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பான்கள் நிறுவுவதற்கு அல்லது வழக்கமான காப்பி அரைப்பான்கள் பயன்படுத்தி ஈரமுறையில் காப்பி பதப்படுத்தும் தோட்டங்களில் கழிவு நீர் சுத்திகரிப்பு அலகு அமைத்து மாசுவை தணிப்பதற்கும், மானியம் வழங்கப்படுகிறது.

## <u>இயற்கை சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பான்களுக்கான மானிய உதவிகள் :</u>

### <u>மான்யம் பெற தகுதிகள் :</u>

1. இது வரை காப்பி வாரியத்தின் மூலம் வழக்கமான காப்பி அரைப்பான்களுக்கு மானியம் பெறாத அனைத்து பிரிவு காப்பி விவசாயிக்களுக்கும் தகுதியுள்ளது விண்ணப்பங்கள் தனிப்பட்ட நபராகவோ அல்லது ஒன்றுக்கும் மேற்பட்டவரோ கூட்டாகச்சேர்ந்து விண்ணப்பிக்கலாம். மேலும் பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் **(Corporates)** மற்றும் கூட்டுறவு சட்டத்தின் கீழ் இயங்கும் காப்பித்தோட்டங்களுக்கு இத்திட்டத்தின் கீழ் பயன்பெறலாம்.

2. கடந்த 10 ஆண்டுகளில் வழக்கமான உபயோகத்தில் உள்ள காப்பி அரைப்பான்களுக்கு மான்யம் வாங்கியிருந்தாலும் இந்த வகையான காப்பி அரைப்பான்களுக்கும் மான்யம் பெறலாம். ஆனால் வழக்கமான அரைப்பான்களுக்கு வாங்கிய மானியத்தொகை போக மீதம் பெறலாம்.

3. சுற்றுப்புற சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பானுக்கு மானியம் பெற விருப்பம் உள்ளவர்கள் தரமேம்பாட்டு திட்டத்தின் கீழ் உள்ள மற்ற திட்டங்களின் மான்யத்தை பெற இயலாது.

4. ஒரு கிலோ அராபிகா பழம் அரைக்க 1.0 லிட்டர் தண்ணீருக்கு குறைவாகவும், ரோபஸ்டா பழம் அரைக்க 1.5 லிட்டர் தண்ணீருக்கு குறைவாகவும் அரைக்க பயன்படும் சுற்றுசூழலுக்கு ஏற்புடைய அரைப்பான்களுக்கு மட்டும் இத்திட்டத்தின் கீழ் மானியம் பெற பரிசீலிக்கப்படும்.

5. சுற்றுப்புறசூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பானின் மானிய விவரங்கள், அரைப்பானின் விலை மற்றும் அவைகள் மறு சுழற்சி மூலம் நீரை திருப்பி அனுப்பும் பகுதி, காப்பி பழத்தை எடுத்துச் செல்லும் பகுதி, காப்பி மிதப்புகளை பிரிக்கும் பகுதி, அரைபடாத காய், பழங்களை திருப்பி அனுப்பும் பகுதி, காப்பி பழ வழவழப்பான பகுதியை பிரிக்கும் பகுதி (செங்குத்தாக அல்லது உராய்வு மூலம்) அரைத்த பின் காப்பி தோலை எடுத்து செல்லும் பகுதி, அரைபட்ட காப்பியிலிந்து வரும் அடர்த்தியான பசை மற்றும் பல பாகங்களின் விலைகளின் கணக்கில் எடுத்துக் கொண்டு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்த வகையான காப்பி அரைப்பான்களை இயக்க பயன்படுத்தப்படும் மின் / டீசல் இயந்திரங்களின் விலைகள், இதனை அமைக்க ஏற்படும் செலவுகள் வரையறுக்கப்பட்ட மானிய அளவின் படி பரிசீலிக்கப்படும் ஆனால் தனிப்பட்ட பாகங்களுக்கு மான்யம் வழங்கப்படமாட்டாது.

6. சுற்றுப்புற சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பான்கனை வாங்க விருப்பம் உள்ளவர்கள் 10.0 ஹெக்டேர் மற்றும் அதற்கு மேல் காப்பி தோட்டம் வைத்திருக்க வேண்டும். இந்த

வகையான காப்பி அரைப்பான்கள் அதிக விலை கொண்டவை ஆகையால் சிறு விவசாயிகள் குழுக்கள் அமைத்து மானியம் பெறலாம்.

7. விவசாயிகள் குழுக்கள் மூலமாக நிறுவப்படும் சுற்றுப்புற சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பான் அமைப்பதற்கு, தனி நபர் இதை அமைப்பதை காட்டிலும் முன்னுரிமை அளித்து காப்பி வாரியத்தின் மூலம் நிதி அளிக்கப்படும்.

## திட்ட மதிப்பீடு மற்றும் மானியத்தின் அளவு விவரங்கள்

வெவ்வேறு திறன் கொண்ட சுற்றுப்புற சூழலுக்கு ஏற்புடைய காப்பி அரைப்பான்களின் மான்ய விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளது.

| நிலத்தின் அளவு | திறன் (கிலோ / மணி) | தனிப்பட்ட திட்ட மதிப்பீடு (ரூபாய்) | | மொத்த மதிப்பீடு | மானியத்தின் அளவு (ரூபாய்) |
|---|---|---|---|---|---|
| | | சுற்றுப்புற சூழலுக்கு ஏற்புடைய அரைப்பான்கள் | கட்டிட வேலைகள் | | |
| 10 ஹெக்டேர் முதல் 25 ஹெக்டேர் வரை | 1000-2000 | 9,30,000 | 2,70,000 | 12,00,000 | 4,80,000 |
| 25 ஹெக்டேர் மேல் | 2500 | 12,50,000 | 2,70,000 | 15,20,000 | 5,00,000 |

### மானியத்தின் அளவு

திட்ட மதிப்பீட்டில் 40 சதவீதம் என்ற அளவில் உச்சவரம்பாக ரூபாய் 5.0 லட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

## கழிவு நீர் சுத்திகரிப்பு அலகு ( ETP )

### தகுதிகள்

1. வழக்கமான உபயோகத்தில் உள்ள காப்பி அரைப்பான்களை பயன்படுத்தி ஈரமுறைப்படி காப்பி பதப்படுத்தும் போது ஏற்படும் கழிவுகளை அகற்றும் காப்பி விவசாயிகள் அனைவரும் தரமேன்பாட்டுத் திட்டத்தின் மூலம் மானியம் பெறலாம்.

2. கடந்த 10 ஆண்டுகளில் கழிவு நீர் சுத்திகரிப்பு திட்டத்தின் மூலம் பயன்பெற்றவர்கள் மீண்டும் மானியம் பெற இயலாது.

3. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் வரையறுக்கப்பட்ட விதி முறைகளை பின்பற்றி கழிவு நீர் சுத்திகரிக்கும் அலகு அமைக்கப்படவேண்டும்.

4. மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் நெறிமுறைகளின் படி 10 ஹெக்டேர் வரை உள்ள காப்பி தோட்டங்களுக்கான திட்ட மதிப்பீடு மண்வெட்டி குழி எடுக்க மற்றும் குழி பூசுவதற்கு மட்டும் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுவே 10 ஹெக்டேருக்கு மேல் உள்ள விவசாயிகளுக்கு திட்ட மதிப்பானது. மேலே கூறப்பட்ட தொட்டிகளை சிமெண்டால் கட்டுவதற்கு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

திட்ட மதிப்பீட்டில் 40 சதவீதம் என்ற அளவில் உச்சவரம்பாக ரூபாய் 5.0 லட்சம் வரை மானியமாக வழங்கப்படும்.

# சூழல் சான்றிதழ் பெறுவதற்கான உதவி ( Eco Certification )

நோக்கம் காப்பி விவசாயிகள் அதிக விலை பெறக்கூடிய வகையில் தரமான காப்பி உற்பத்தி செய்வதும் மற்றும் அக்காப்பி தரமான பொருட்களுக்கென உள்ள சிறப்பு சந்தைகளுக்கு சென்றடைவதை ஊக்குவிப்பதும் இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும்.

இத்திட்டத்தின் மூலம் சிறு விவசாயிகள் ஒருங்கிணைந்து சூழல் சான்றிதழ் பெற அவர்களையும் குழுக்களாக சேர்ப்பதே நோக்கமாகும். இது வருங்காலத்தில் அவர்கள் அனைவருக்கும் பொதுவான வசதிகளை ஏற்படுத்த சௌகரியம் செய்யும் வழி வகுக்கும்.

## மானியம் பெற தகுதி :

தர மதிப்பீடு மற்றும் நிலைநிறுத்தல் / தன்னிரைவு சான்றிதழ் பெரும் 20 ஹெக்டேருக்கு கீழ் உள்ள தனி நபர் விவசாயிகளும் / சிறு விவசாயிகளின் குழுக்களும் / சுய உதவி குழுக்களும் இத்திட்டத்தின் மூலம் பயன் பெறலாம். பாரம்பரியமற்ற காப்பி சாகுபடி பகுதிகளில் உள்ள பழங்குடி அல்லாதவர்களும் பயன் பெறலாம்.

இத்திட்டத்தின் மூலம் இயற்கை வழி வேளாண்மை, நியாய வணிகம், மழை காடுகள் ஒத்தழை நல்ல தரமான பொருள் ( UTZ ) பறவை நட்பார்ந்த மற்றும் நிழலில் வளர்க்கப்ட்ட காப்பி மற்றும் காப்பி வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட வேறு ஏதேறும் சான்றிதழ் பெற மானியம் வழங்கப்படும்.

## <u>மானிய வரம்பு :</u>

இயற்கை வழி வேளாண்மை சான்றிதழ் மானியம் பெற தனி நபர் விவசாயிகள் / விவசாய குழுக்களுக்கு சான்றிதழ் கட்டணத்தில் 50 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ. 50,000/- மானியமாக வழங்கப்படும். அம்மானியத் தொகையான ரூ. 50,000/- தவணை முறையில் ஒராண்டுக்கு மேலாக இந்த ஐந்தாண்டு திட்டத்தில் அளிக்கப்படும்.

## மற்ற சான்றிதழ்கள் பெற :

தனி நபர் விவசாயிகளுக்கு சான்றிதழ் கட்டணத்தில் 50 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ. 50,000/- மானியமாக ஒரு வருடத்திற்கு மட்டும் வழங்கப்படும். சிறு விவசாய குழுக்களுக்கு சான்றிதழ் கட்டணத்தில் 50 சதவிகிதம் அதிகபட்சமாக ரூ. 50,000/- தவணை முறையில் ஒராண்டு மேலாக இந்த ஐந்தாண்டு திட்டத்தில் அளிக்கப்படும். மேலும் விபரங்களுக்கு அப்பகுதியில் உள்ள காப்பி வாரிய அலுவலகத்தை அணுகவும்.

# காப்பித் தோட்ட வேலைகளை இயந்திர-மயமாக்குதலுக்கான மானிய திட்டம் (Mechanization)

காப்பித் தோட்டத் தொழிலாளர்களின் வேலைத்திறனை மேம்படுத்தவும் தோட்ட வேலைகளை உரிய நேரத்தில் செய்து காப்பி உற்பத்தியினைப் பெருக்கவும். நீடித்த காப்பி வேளாண்மைக்கும், காப்பி தோட்ட வேலைகளை இயந்திரமயமாக்குதலுக்கு. காப்பி விவசாயிகளுக்கு ஊக்க தொகை வழங்குதல்.

## விவசாயிகள் மானியம் பெறுவதற்கான தகுதி

1. தனிநபர் காப்பி விவசாயிகள் / கூட்டுரிமை தோட்டங்கள் / சுய உதவி குழுக்கள் / விவசாயி குழுக்கள் பயன்பெறலாம். கூட்டுரிமை தோட்டங்கள் கூட்டாக ஒரு திட்டத்தில் பயன்பெற்றால் மற்ற எல்லா திட்டங்களுக்கும் சேர்ந்தே பயன் பெற முடியும்.

2. இரண்டு அல்லது மேற்பட்ட தனித்தனியான தோட்ட உரிமையாளர்கள் கூட்டாக சேர்ந்த விண்ணப்பிக்க இயலாது. எடுத்துக்காட்டாக இரண்டு ஹெக்டேர் காப்பித் தோட்டமுள்ள ஒரு விவசாயியும், முன்று ஹெக்டேர் காப்பித் தோட்டமுள்ள மற்றொரு விவசாயியும் கூட்டாக இணைந்து விண்ணப்பிக்க இயலாது.

3. தனிநபர் தோட்டங்களைக் கொண்டுள்ளவர்கள் தனிநபராகவும், கூட்டுத் தோட்ட உரிமையாளர்கள் கூட்டாக சேர்ந்தும், சுய உதவி குழுக்கள் மற்றும் விவசாய குழுக்களின் அங்கீகரிக்கப்பட்ட பிரதிநிதிகளும் விண்ணப்பங்களை பூர்த்தி செய்து சமர்பிக்க முடியும்.

4. தனிநபர் விவசாயிகளுக்கும், கூட்டு தோட்ட உரிமையாளர்களுக்கும், தோட்டத்தின் பரப்பளவைப் பொறுத்து அவர்களுக்கான மானிய அளவாளது தீர்மானிக்கப்படும்.

5. விண்ணப்பிப்பவர்கள் அங்கீரிக்கப்பட்ட இயந்திரங்களில் ஒன்றையோ அல்லது எல்லா விதமான இயந்திரங்களையோ 12-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் ஒரே நேரத்திலோ அல்லது வெவ்வேறு காலங்களிலோ அவர்களுக்கு அனுமதிக்கப்பட்ட உச்ச வரம்பிற்குட்பட்டு மானிய விலையில் வாங்கலாம்.

6. விண்ணப்பிப்பவர்கள் தங்கள் விருப்பத்திற்கேற்றார் போல் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரங்களை நேரடியாக அவற்றின் கம்பெனிகளிலோ, மொத்த வினியோகிப்பாளர்களிடமோ அல்லது காப்பி வாரியத்தின் ஒப்புதலுடன் அனுமதிக்கப்பட்ட விற்பனையார்களிடமோ வாங்கி கொள்ளலாம்.

7. விவசாயிகள் இயந்திரங்களை வாங்கும் முன்பு அந்த இயந்திரம் அங்கீகரிக்கப்பட்ட பட்டியலில் இடம் பெற்றுள்ளதா என சரிபார்த்துக் கொள்ளவும். பட்டியலில் இடம் பெறாத இயந்திரங்களுக்கு இத்திட்டத்தின் மூலம் மானியம் பெற இயலாது.

8. உச்சவரம்பு வரையறுக்கப்பட்ட அடிப்படை விலை மற்றும் அதற்கான மதிப்பூட்டப்ட்ட வரி அல்லது அசல் விலைப்பட்டியல் மற்றும் அதற்கான மதிப்பூட்டப்பட்ட வரி ஆகிய இரண்டில் எது குறைவோ அத்தொகை மானியத் தொகையாக வழங்கப்படும்.

9. கம்பெனி அல்லது விற்பனையாளர்கள் கொடுக்கும் விலைப்பட்டியலில் இயந்திரத்தின் பெயர், மாதிரி, வரிசை எண் மற்றும் உதிரிபாகங்கள் பற்றி விவரங்கள் ஏதேனும் இருந்தால் குறிப்பிடப்பட்டிருக்கவேண்டும். இயந்திரத்தின் விலையானது. அடிப்படை விலை, வரி விகிதம் அதற்குரிய வரித்தொகை மற்றும் மொத்த விலை போன்றவை மேற்கோள் காட்டி

குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

| இயந்திரத்தின் வகை | தேவை / தகுதி |
|---|---|
| களை வெட்டும் கருவி | ஒன்று 4 ஹெக்டர் வரை |
| நிழல்மரக்கிளை வெட்டும் கருவி | ஒன்று 4 ஹெக்டர் வரை |
| குழி எடுக்கும் கருவி | ஒன்று 20 ஹெக்டர் வரை |
| பேட்டரியால் இயங்கும் பழம் எடுக்கும் கருவி | ஒன்று 2 ஹெக்டர் வரை |
| விசை தெளிபான் | ஒன்று 4 ஹெக்டர் வரை |
| சங்கிலி மூலம் மரம் அறுக்கும் கருவி | ஒன்று 10 ஹெக்டர் வரை |
| பச்சைக்காய் பிரித்தெடுக்கும் கருவி | ஒன்று 10 ஹெக்டர் வரை |
| பவர் டில்லர் | ஒன்று 2 ஹெக்டர்-க்கு மேலுள்ள தோட்டத்திற்கு |
| சிறிய டிராக்டர் | ஒன்று 4 ஹெக்டர் மற்றும் அதற்கு மேல் உள்ள தோட்டத்திற்கு |
| சிறிய சரக்கு ஏற்றி செல்லும் டிராக் கேரிபா | ஒன்று 4 ஹெக்டர் மற்றும் அதற்கு மேல் உள்ள தோட்டத்திற்கு |

மானிய அளவு

| நிலப்பரப்பளவு பிரிவுகள் | மானிய அளவு |
|---|---|
| 20 ஹெக்டேர் வரை உள்ள விவசாயிகள் | 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ. 2.0 லட்சம் |
| பெரிய விவசாயிகள் 20 ஹெக்டர் மேல் உள்ள | 25 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ. 4.5 லட்சம் |
| சுய உதவி குழுக்கள் / சிறு விவசாயிகளிக் குழுக்கள் | 50 சதவீத மானியம் அதிகபட்சமாக ரூ. 5.0 லட்சம் |

## மானியம் கோருதலுக்கான வழிமுறைகள் :

1. விண்ணப்பதாரர் உரிய படிவத்தை (இரண்டு பிரதிகள்) தேவையான நில ஆவணங்களுடன் அந்தந்த இளநிலை / முதுநிலை தொடர்பு அலுவலரிடம் அங்கீகரிக்கப்பட்ட இயந்திரங்கள் வாங்கிய அசல் விலைப்பட்டியலுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

2. அந்தந்த முதுநிலை / இளநிலை தொடர்பு அலுவலர் நேரடி ஆய்வு செய்து உரிய மானியம் பெறுவதற்கு ஏற்பாடு செய்வார்கள். விவசாயிகள் இணையதளம் ( Online) வழியாகவும் விண்ணப்பிக்கலாம்.

# காப்பிக்கான மழை காப்பீட்டு திட்டம் ( RISC )

## நோக்கம் :

நிலையற்ற மற்றும் மாறுப்பட்டு பெய்யும் மழையினால் ஏற்படும் காப்பி விவசாயிகளுக்கான இழப்பீட்டிற்கு தகுந்த காப்பி மழை காப்பீட்டு திட்ட மேலாண்மையை வழங்குவது. இத்திட்டத்தின் நோக்கமாகும்.

## காப்பி மழை காப்பீட்டு திட்டம் :

இந்நாட்டிலுள்ள காப்பி விவசாயிகளுக்காக சிறப்பாக வடிவமைக்கப்பட்ட மழை அளவை அடிப்படையாக கொண்ட தனித்துவமான காப்பீட்டு திட்டமாகும்.

இந்த திட்டமானது அக்ரிகல்சர் இன்சுரன்ஸ் கம்பெனி ஆப் இந்தியா லிமிடெட் என்ற நிறுவனத்தினரால் காப்பி விவசாயிகளின் சங்கத்தினர் மற்றும் காப்பி வாரியத்தின் கருத்துகளையும் கேட்டறிந்ததின் அடிப்படையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## தகுதிகள்

நாட்டிலுள்ள அனைத்து காப்பி விவசாயிகளும் இந்த காப்பீட்டுத்திட்டத்தை வாங்கலாம்.

10 ஹெக்டேர் வரை சொந்தமாக உள்ள காப்பி சிறு விவசாயிகள் அதற்கான பீரிமிய தொகையில் மானியத்தை மத்திய அரசும் மாநில அரசும் வழங்கும்.

நடுத்தர மற்றும் பெரிய விவசாயிகள் குழு முழு பிரிமீயத்தொகையை செலுத்தி இத்திட்டத்தில் இணையலாம்.

இந்த காப்பீடு, வழக்கத்திற்கு மாறாக கூடுதல் அல்லது குறைவான மழையினால் காப்பியின் மகசூல் குறைவதற்கு எதிராக காப்பி விவசாயிகளின் விருப்பத்திற்கு ஏற்றார் போல் குறிப்பிட்ட புவியியல் அமைவிடம் மற்றும் குறிப்பிட்ட கால அளவு அந்த காப்பீட்டில் காப்பீடு செய்யப்பட்ட அதிகபட்ச காப்பீட்டுத் தொகை உள்ளடக்கியது.

## காப்பி மழை காப்பீடு திட்டம் கீழ்க்கண்டவாறு நான்கு முறைகளை கொண்டவை

பூக்கால மழை காப்பீடு – குறைவான மழைக்கு எதிரான நஷ்டஈடை உள்ளடக்கியது.
பின் மழை காப்பீடு – குறைவிற்கு எதிரான நஷ்டஈடை உள்ளடக்கியது.
பருவ மழை காப்பீடு – அதிக மழைக்கு எதிரான நஷ்டஈடை உள்ளடக்கியது.
பின் பருவ மழை காப்பீடு – அதிக மழைக்கு எதிரான நஷ்டஈடை உள்ளடக்கியது.

ஒரு விவசாயி காப்பீட்டின் வரையறைக்குள் சந்தா செலுத்த கீழ்கண்டவற்றிள் ஏதேனும் ஒன்றோ அல்லது இணைந்த காப்பீட்டை தங்களது விருப்பத்தின் அடிப்படையில் தேர்வு செய்யலாம்.

| | |
|---|---|
| 1. பூமழை, | 5. பூக்காலம் மற்றும் பருவ மழை, |
| 2. பருவ மழை | 6 பூக்காலம், பின் மழை மற்றும் பருவ மழை, |
| 3. பின் பருவ மழை, | 7. பூக்காலம், பின் மழை, பருவ மழை மற்றும் பின் பருவ மழை |
| 4. பூ மற்றும் பின் மழை | 8. பருவ மழை மற்றும் பின் பருவ மழை |

மேலும் விபரங்களுக்கு தங்களது பகுதியில் உள்ள காப்பி வாரிய அலுவலகத்தை அணுகவும்.

# வட்டி மானியத்திட்டம் ( Interest Susidy Scheme )

## நோக்கம் :

காப்பி விவசாயிகளுக்கு தோட்டப்பணி பொருளாதார ரீதியில் சாத்தியமாகும் வகையில் அவர்களுடைய முதலீட்டுக் கடனுக்கான வட்டிக்கு மானியம் வழங்குதல்.

மொத்த வட்டிக்கு மானிய அளவானது இந்த பனிரெண்டாவது ஐந்தாண்டு திட்டத்தில் அதிகபட்சமாக ரூ. 30 கோடி வரை வழங்கப்படும்.

## தகுதிகள் :

வணிக வங்கிகள், மண்டல ஊரக வங்கிகள், மற்றும் கூட்டுறவு வங்கிகளில் கடன் பெறும் 20 ஹெ வரை பரப்பளவு கொண்ட காப்பி தோட்ட விவசாயிகள் 2014-15, 2015-16 மற்றும் 2016-17 பயிர்காலங்களில் அல்லது அவ்வப்போது காப்பி வாரியத்தால் தெரிவிக்கப்படும் காலங்களில் கடன் உதவி பெறுவோர், தகுதியுடையவர்கள் ஆவார்கள்

## மானியத்தின் அளவு :

அதிகபட்சமாக 5 சதிவிகிதம் வரை மானியம் வழங்கப்படும். ஒருவர் வட்டிக்குறிய மானியம் பெற்ற பிறகு அவரின் பயிர்க் கடனுக்குறி வட்டி 4 சதவிகிதத்திற்கு குறைவாக இருக்கக்கூடாது உதாரணமாக ஒருவருடைய பயிர்க் கடன் வட்டி 8 சதவிகிதமாக இருந்தால் அவருக்கு அதிகபட்சமாக 4 சதவிகிதம் மட்டுமே மானியமாக வழங்கப்படும். அராபிகா காப்பி பயிர் செய்யும் விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு நிதி ஆண்டிற்கு ரூ. 80,000-ம் ரொபஸ்டா காப்பி பயிர் செய்யும் விவசாயி ஒருவருக்கு அதிகபட்சமாக ஒரு நிதி ஆண்டிற்கு ரூ. 60,000-ம் மட்டுமே மானியமாக வழங்கப்படும்.

மானிய கணக்கீடு நிதி ஆண்டின் (ஏப்ரல் – மார்ச்) அடிப்படையிலேயே அமையும்.

வட்டி மானியம் கோருவதற்கான வழிமுறைகள்

அனைத்து பங்கு கொள்ளும் வங்கிகளும் மானியம் கோருவதற்கு பரிந்துரைக்கப்பட்ட படிவத்துடன் தேவையான வருவாய் ஆவணங்களுடன் சமர்ப்பிக்க வேண்டும்.

கோரப்படும் மானியமானது வழங்கப்பட்ட கடன் தொகையையும் அதற்கு விவசாயிகள் செலுத்தும் வட்டியையும் பொறுத்து அமைந்திருக்க வேண்டும்.

முறைப்படி பூர்த்தி செய்யப்பட்ட மானியம் கோரும் விண்ணப்பத்தையும் அதன் மென்நகலையும் காப்பி வாரியத்தின் தலைமை அலுவலகம் பெங்களூருவில் உள்ள துணை இயக்குநர் (கணக்கியல்) அவர்களிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டிய நாளானது ஒவ்வொரு ஆண்டும் பிப்ரவரி மாதம் 25-ம் நாளாகும்

கடைசி தேதிக்குப் பிறகு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது.

# சந்தை மேம்பாடு ( Market Development )

சிறு விவசாயிகளின் குழுக்கள் / சுய உதவிக்குழுக்கள் / கூட்டுறவு அமைப்புகள் காப்பியை சந்தைப்படுத்துவதற்கான உதவி

## <u>நோக்கம் :</u>

குழு அமைப்பின் மூலமாக தரமான காப்பியை உற்பத்தி செய்து சந்தைபடுத்தும் சிறு விவசாயிகளின் குழுக்கள் / சுய உதவிக்குழுக்கள் / கூட்டுறவு அமைப்புகளுக்கு தகுந்த நிதி உதவி செய்வதின் மூலம் அவர்கைள ஊக்கப்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கமாகும். இத்திட்டத்தின் மூலம் ஒரு கிலோ பருப்பிற்கு ரூபாய் 4/– மானியமாக வழங்கப்படும்.

## <u>தகுதிகள் :</u>

1. பாரம்பரியமாக காப்பி விளையும் மாநிலங்களில் உள்ள அனைத்து சிறு விவசாயிகளின் குழுக்கள் / சுய உதவிக் குழுக்கள் / கூட்டுறவு அமைப்புகள்.

2. காப்பி சந்தைப்படுத்துதல் சிறு விவசாயிகளின் குழுக்கள் / சுய உதவிக்குழுக்கள் / கூட்டுறவு அமைப்புகளின் பெயரிலேயே நடைபெற வேண்டும்.

3. இந்திய காப்பி வர்த்தக அமைப்பு போன்ற அங்கீகரிக்கப்பட்ட பொது ஏலக்கட்டமைப்புகளின் மூலமாக நடைபெற வேண்டும்.

4. அமைப்பின் மூலமாக நேரடியாக ஏற்றுமதி செய்யலாம்.

5. நேரடி காப்பி விற்பனையானது அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக பரிமாற்ற நிறுவனங்கள் மூலமாகவும் நடைபெறலாம்.

## <u>விண்ணப்பிக்கும் முறைகள்</u>

1. தகுந்த ஆவணங்களுடன் சிறு விவசாயிகளின் குழுக்கள் / சுய உதவிக்குழுக்கள் / கூட்டுறவு அமைப்புகள் காப்பி சந்தைப்படுத்திய பின்பு உரிமை கோறும் படிவத்தை சமர்ப்பிக்க வேண்டும்.

2. மானியத்திற்கான விண்ணப்பத்தினை துணை இயக்குநர் (விரிவாக்கம்) அவர்களுக்கு சமர்பிக்க வேண்டும்.

3. அந்தந்த மண்டலங்களிலிருந்து பெறப்படும் விண்ணப்பங்களை அதன் துணை இயக்குநர் ( விரிவாக்கம் ) சரிபார்த்து ஏற்றுக்கொள்வதற்காக தலைமையகத்திற்கு அனுப்ப வேண்டும்.

---

மானியம் பெற முழுமையான விபரங்கள் மற்றும் பின்பற்ற வேண்டிய விளக்கங்களை அனைத்து முதுநிலை / இளநிலை தொடர்பு காப்பி வாரிய அலுவலகங்களிலும் மற்றும் **www.indiacoffee.org** எனும் இணையதளத்திலும் கிடைக்கும்.

Jaya Press, Cbe - 27. 94427 38707